# காலி பணியிடங்களை நிரப்ப கோரிக்கை

– நமது நிருபர் –

வேளாண் துறையில் உள்ள, காலி பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கும்படி, அரசு பணியாளர் தேர்வாணையமான, டி.என்.பி.எஸ்.சி.,யிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

டி.என்.பி.எஸ்.சி., வாயிலாக, 327 வேளாண் அலுவலர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட தேர்வை முடித்துள்ள தேர்வாணையம், விரைவில், இரண்டாம் கட்ட தேர்வை நடத்தவுள்ளது. அங்கிருந்து பட்டியல் வந்த பின் தான், காலி பணியிடங்களை நிரப்ப முடியும்.

இதேபோல, 584 உதவி வேளாண் அலுவலர் பணியிடங்களை நிரப்ப, தேர்வாணையத்திடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. நடவடிக்கை எடுப்பதாக, உறுதி அளிக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ‘நீட்’ தேர்வுக்கு அவகாசம் பள்ளிகளுக்கு அறிவுரை

**சென்னை, டிச. 1–**

‘நீட் தேர்வுக்கான கூடுதல் அவகாசத்தை பயன்படுத்தி, மாணவர் பதிவை அதிகப்படுத்த வேண்டும்’ என, தலைமை ஆசிரியர்களுக்கு, மாவட்ட கல்வி அதிகாரிகள் உத்தரவிட்டு உள்ளனர்.

மருத்துவ படிப்புக்கான, ‘நீட்’ நுழைவு தேர்வில், பொது பிரிவினருக்கு, 25 வயது, உச்ச வரம்பாக நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. இதை எதிர்த்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், பொது பிரிவில், 25 வயதுக்கு மேற்பட்டவர்களும், நீட் நுழைவு தேர்வில் பங்கேற்கலாம் என, உத்தரவிட்டது.

பிற்படுத்தப்பட்ட பிரிவினரில், 30 வயதுக்கு மிகாதவர்கள் மட்டுமே பங்கேற்கலாம் என்ற நடைமுறையில், மாற்றம் செய்யவில்லை.

இந்நிலையில், உச்ச நீதிமன்ற தீர்ப்பை அடுத்து, 25 வயதுக்கு மேற்பட்டவர்களும், தேர்வுக்கு விண்ணப்பிக்கும் வகையில், நீட் தேர்வு பதிவுக்கு கூடுதலாக, ஒரு வாரம் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முடிவதாக இருந்த, ‘ஆன்லைன்’ விண்ணப்ப பதிவு, டிச., 7 வரை நீட்டிக்கப்பட்டு உள்ளதாக, தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

அரசு மற்றும் தனியார் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு, முதன்மை கல்வி அதிகாரிகள் அறிவுரை வழங்கியுள்ளனர்.

இந்த கூடுதல் வாய்ப்பை பயன்படுத்தி, அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களில் விடுபட்டவர்களையும், பதிவு செய்து, தமிழக மாணவர் எண்ணிக்கையை உயர்த்த, அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இயந்திர கோளாறு: விமானம் தரையிறக்கம்

**சென்னை, டிச. 1–**

கேரள மாநிலம், கோழிக்கோட்டிற்கு சென்ற விமானத்தில், திடீரென இயந்திர கோளாறு ஏற்பட்டதால், அவசரமாக சென்னையில் தரையிறக்கப்பட்டது.

சென்னையிலிருந்து நேற்று காலை, 7:00 மணிக்கு, கோழிக்கோட்டிற்குச் செல்லும், ‘ஸ்பைஸ் ஜெட்’ விமானம், 63 பேருடன் புறப்பட்டது.

விமானம் பறக்கத் துவங்கிய சில நிமிடங்களில், அதில், இயந்திர கோளாறு ஏற்பட்டுள்ளதை, பைலட் கண்டறிந்தார். உடனே, சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறையான, ஏ.டி.சி.,க்கு தகவல் கொடுத்தார்.

பின், விமானம் அவசரமாக சென்னை விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது. தகுந்த நேரத்தில், இயந்திர கோளாறை, பைலட் கண்டறிந்ததால், 63 பேர் உயிர் தப்பினர்.










# ‘செட்டில்மென்ட்’ பத்திரம் இனி ரத்து செய்யலாம்!

– நமது நிருபர் –

சொத்து பரிமாற்றத்தில் எழுதி கொடுக்கப்படும், ‘செட்டில்மென்ட்’ பத்திரங்களை, அதில் கூறப்பட்ட நிபந்தனைகள் நிறைவேறாத நிலையில், ரத்து செய்ய அனுமதிக்கலாம் என, பதிவுத் துறை உத்தரவிட்டுள்ளது.

பொதுவாக, குடும்ப தலைவர் பெயரில் உள்ள சொத்தை, உயில் வாயிலாக, வாரிசுகளுக்கு வழங்கலாம்.

இல்லையெனில், ‘செட்டில்மென்ட்’ எனப்படும், தானமாக எழுதி தரப்படும் பத்திரங்கள் வாயிலாகவும் கொடுக்கலாம்.

இவ்வகையில், திருவண்ணாமலையைச் சேர்ந்த, கண்ணன் என்ற விவசாயி, ‘செட்டில்மென்ட்’ வாயிலாக, மகன்களுக்கு நிலத்தை பங்கிட்டு கொடுத்து உள்ளார்.

அதன்பின், மகன்கள், அவரை முறையாக பராமரிக்கவில்லை என, கூறப்படுகிறது.

இது தொடர்பான புகாரை விசாரித்த, திருவண்ணாமலை கலெக்டர், சம்பந்தப்பட்ட நபர் எழுதி கொடுத்த, ‘செட்டில்மென்ட்’ பத்திரத்தின் பதிவையும், பட்டா மாறுதலையும் ரத்து செய்து, கண்ணன் பெயருக்கே, அந்த சொத்து திரும்ப கிடைக்க ஏற்பாடு செய்தார்.

இந்த சம்பவம், சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. தற்போது, செட்டில்மென்ட் பத்திரங்களை எழுதி கொடுத்தவர், ரத்து செய்ய அணுகினால், அந்த கோரிக்கையை, எப்படி அணுக வேண்டும் என்பதில், குழப்பம் ஏற்பட்டு உள்ளது.

இது தொடர்பாக, பதிவுத்துறை தலைவர், குமரகுருபரன் பிறப்பித்துள்ள உத்தரவு:

- எவ்வித நிபந்தனைகளும் இல்லாத, செட்டில்மென்ட் பத்திரங்களை எழுதி கொடுத்தவர் மட்டும், ரத்து செய்வதற்கான ஆவணத்தை தாக்கல் செய்தால், அதை ஏற்காமல், மறுப்பு சீட்டு வழங்கலாம்
- எழுதி கொடுத்தவர், பெற்றவர் இருவரும் நேரில் ஆஜராகி, ரத்து ஆவணம் அளித்தால், அதை ஏற்று, செட்டில்மென்ட் பத்திரத்தை ரத்து செய்யலாம்
- செட்டில்மென்ட் பெற்றவர், அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை என்று, ரத்து ஆவணம் தாக்கல் செய்தால், அதில் நிபந்தனைகளை ஆராய்ந்து, சார் – பதிவாளர் முடிவு எடுக்கலாம்
- நிபந்தனைகள் நிறைவேற்றப்படாதது உறுதியாக தெரியும் நிலையில், ரத்து ஆவணத்தை, சார் – பதிவாளர்கள் ஏற்கலாம்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முதல்வர் மருத்துவ காப்பீடு தொகை உயர்வு

**சென்னை, டிச. 1–**

முதல்வர் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ், ஆண்டுக்கு வழங்கப்படும், 2 லட்சம் ரூபாய் வரையிலான, காப்பீட்டுத் தொகையை, 5 லட்சம் ரூபாயாக உயர்த்தி, முதல்வர் பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில், ஏழை, எளிய மக்களுக்கும், உயர்தர மருத்துவ சிகிச்சை கிடைக்க வேண்டும் என்பதற்காக, 2012 ஜன., 11ல், முதல்வரின் விரிவான காப்பீட்டு திட்டத்தை, ஜெயலலிதா துவக்கி வைத்தார்.

இந்த திட்டத்தில், 1.58 கோடி குடும்பங்களுக்கு, காப்பீடு அடையாள அட்டை வழங்கப்பட்டு உள்ளது.

இதில், பயன்பெறும் பயனாளிகள், ‘பல்வேறு மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக, தற்போது வழங்கப்படும், 2 லட்சம் ரூபாய் வரையிலான காப்பீட்டுத் தொகையை, மேலும் உயர்த்தி வழங்க வேண்டும்’ என, கோரிக்கை விடுத்தனர்.

அதை பரிசீலனை செய்து, 5 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க, முதல்வர் உத்தரவிட்டு உள்ளார்.

அதன்படி, இன்று முதல், முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில், ஆண்டுக்கு, 5 லட்சம் ரூபாய் வரையிலான, காப்பீட்டுத் தொகைக்கு, கட்டணமில்லாமல் சிகிச்சை பெறலாம்.




SPACIOUS GARDEN VILLAS
Near Tambaram

OUR AMAZING PRICES START AT
₹60 LAKHS*



T&C Apply

Exclusive 2/3/4 BHK Villas from 1182 to 2134 sq. ft. Visit our **MODEL VILLA** today!

REASONS TO OWN A SIGNATURE VILLA

Not just a 3BHK but a 3BHK + Additional Lounge + Large Open Deck + Private Terrace + Private Gardens and much more

Featuring the smartest utilization of space to give you a larger than life experience

Indulge in the serenity of the verdant hills with excellent connectivity

Handover In 12 Months

S&P SIGNATURE VILLAS
NEAR TAMBARAM

For More Information:
Call: (044) 6600 6600
sales@sandp.co.in | www.sandp.co.in

MEMBER CREDAI
CMDA NO: 22/2017 RERA NO: TN/01/Building/0308/2018 Dt. 28.09.2018